# 09 திருப்தியுடன் வாழ்வோம்



பசி கொண்ட நாயொன்று
  இரைதேடி அலைந்தது
நெடுந்தூரம் சென்றதால்
  களைப்பாவே சோர்ந்தது
வழியோரம் எலும்பொன்று
  வகையாகக் கிடந்தது
வாயினிலே நீரூறித்
  தெருவெல்லாம் நனைந்தது
ஓடிவந்து நாயுமந்த
  எலும்பைக் கவ்விக்கொண்டது
பக்குவமாய் ஓரிடத்தில்
  பசியடக்கப் பார்த்தது
பாலமொன்று குறுக்கிடவே
  கடந்து போக நினைத்தது
கவனமாக நடந்தபோது
  ஆற்றுநீரைப் பார்த்தது
தன்னைப் போல நாயொன்று

நீரில் தாவிவரக் கண்டது
கடித்து நாயை விரட்டிவிட்டு
எலும்பைப் பறிக்கப் பார்த்தது
இரண்டு எலும்பு எனக்குவரும்
கடித்து நானும் தின்றிடுவேன்
நினைத்த நாயும் மகிழ்வுடனே
வள் வள் வள் வள்ளென்று
வாயைத் திறந்து குரைத்தது
பாவம் அந்த நாயினது
வாயிலிருந்த எலும்புத்துண்டு
ஆற்று நீரில் சென்றது
பேராசை கொண்ட நாயும்
இருந்த எலும்பும் இழந்ததை
இறுதியில்தான் உணர்ந்தது
இருக்கின்ற பொருள் கொண்டு
திருப்தியுடன் வாழ்ந்திடுவோம்!

**பேராசை பெருநட்டம்**
**දැඩි ආශාව ලොකු විනාශයකි.**

## அரும்பதங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரை | - | ආහාරය | சோர்வு | - | මහන්සිය |
| எலும்பு | - | මස් කටු | பசி | - | බඩගින්න |
| பாலம் | - | පාලම | கவனம் | - | අවධානය |
| திருப்தி | - | තෘප්තිය | | | |

## ஒத்த கருத்துள்ள சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரை | - | உணவு | சோர்வு | - | களைப்பு |
| வழி | - | பாதை | மகிழ்ச்சி | - | சந்தோசம் |
| ஆறு | - | நதி | | | |



### செயற்பாடு 01

**இடைவெளி நிரப்புவோம்.**
**හිස්තැන් පුරවමු.**

1. பசியோடு வந்த நாய் ஒன்று இரை தேடி அலைந்தது.
   (இரை தேடி, உறவு தேடி)
2. ஓடி வந்த நாய் (.............................)க் கவ்விக் கொண்டது.
   (எறும்பை, எலும்பை)
3. எனக்குத் தரும் (........................) கடித்து நானும் தின்றிடுவேன்.
   (ஒரு எலும்பை, இரண்டு எலும்புகளை)

4. இருக்கின்ற பொருள் கொண்டு திருப்தியுடன் (................................)
(வாழ்ந்திடுவோம், வாழக்கூடாது)

5. நாயை விரட்டிவிட்டு எலும்பைப் (......................) பார்த்தது.
(பறிக்கப், கொடுக்க)

## வாக்கியங்கள் වාක්‍යය

கருத்து முற்றுப் பெற்று வருவது வாக்கியம் ஆகும்.

**உதாரணம்:**

நான் சிரித்தேன்.

நாங்கள் அழுதோம்.



## செயற்பாடு 02

**நான் என்பதை வைத்து ஐந்து வாக்கியங்கள் எழுதுவோம்.**
**සුදුසු ක්‍රියා පද යොදා වාක්‍ය සාදන්න.**

1) நான் வந்தேன்
2) நான் ......................................................................
3) நான் ......................................................................
4) நான் ......................................................................
5) நான் ......................................................................



## செயற்பாடு 03

**பின்வரும் படங்களை அவதானித்து வாக்கியம் அமைப்போம்.**

**පින්තූර බලා ගැළපෙන වාක්‍ය ලියන්න.**





நாய் ஓடுகிறது.









**வினா வாக்கியம் ප්‍රශ්න වාක්‍යය**

ஒரு தகவலைத் தெரிந்து கொள்ளுவதற்காக ஏனையவரிடம் வினவும் வாக்கியம் வினா வாக்கியமாகும்.

**உதாரணம்:**

உங்கள் பெயர் என்ன?

நீங்கள் எங்கே செல்கிறீர்கள்?

வீட்டுக்கு போகிறீர்களா?



**செயற்பாடு 04**

**பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியங்களை உருவாக்குவோம்.**

**උදාහරණයට අනුව වචන ගළපා වාක්‍ය සාදන්න.**

1) (போகவில்லையா / நீங்கள் / பாடசாலைக்குப்)
நீங்கள் பாடசாலைக்குப் போகவில்லையா?

2) (அமைதியாக / வாழ்கிறீர்களா? / நீங்கள்)

..........................................................................................

3) (பெயர் / உங்கள் / என்ன? / நண்பனின்)

..........................................................................................

4) (உங்களுக்குப் / பாடம் / பிடித்த / எது?)

..........................................................................................

5) (நான் / வரலாமா? / உங்கள் / வீட்டுக்கு)

..........................................................................................



**செயற்பாடு 05**

**உரத்து வாசிப்போம்.**
**හඬ නගා කියවමු.**

இது என்ன?
உங்கள் பெயர் என்ன?

உங்கள் ஊர் எது?
நீங்கள் போகும் பேருந்து எது?

உங்கள் பாடசாலை எங்கே இருக்கிறது?
உங்கள் அப்பா எங்கே வேலை செய்கிறார்?

தமிழ்த் தின விழா எப்போது நடைபெறும்?
உங்கள் தமிழ்ப் பரீட்சை எப்போது ஆரம்பிக்கும்?

உங்கள் வயது எத்தனை?
உங்கள் வீட்டில் எத்தனை பேர்?

உங்கள் சுகம் எப்படி?
நீங்கள் பாடசாலைக்கு எப்படி வந்தீர்கள்?

## செயற்பாடு 06

**பாடத்திலுள்ள இறந்தகால சொற்களை கண்டுபிடித்து எழுதுவோம்.**
**පාඩමේ තිබෙන අතීත කාල පද ලියමු.**

1. ............................................ 2. ............................................

3. ............................................ 4. ............................................

5. ............................................ 6. ............................................

7. ............................................ 8. ............................................

9. ............................................ 10. ............................................

## செயற்பாடு 07

**தமிழ்ச் சொற்களைச் சிங்களச் சொற்களுடன் இணைப்போம்.**
**සුදුසු වචන යා කරන්න.**

| | |
|---|---|
| நீண்ட தூரம் | ඇටකටු |
| எலும்பு | බඩගිනි |
| பாலம் | බල්ලා |
| பசி | දිගදුර |
| நாய் | පාලම |